திரு. க. சுப்பு, பேசவேண்டியதை இப்போதே பேசிவிடுங்கள். தீர்ப்பு கொடுத்ததற்குப் பின்னால் மறுபடியும் கேட்காமல் இப்போதே பேசி விடுங்கள்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, என்பேரில் ஒரு உரிமை மிறல் பிரச்னையைக் கொடுத்திருந்தேன். அது பற்றி எடுத்துக்கொள்ளவும் இல்லை, தாங்கள் சொல்லவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய பார்வையிலிருந்து விடுபட்டிருக்கலாம்.

திரு. க. சுப்பு: நானும் அவரும் ஒன்றாக கையெழுத்துப் போட்டு கொடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சியிலேஇரண்டு பேர் இருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம்: அவர்களைப் பற்றி வேண்டாம். நான் கொடுத்தது என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது கூட சேர்த்துக் கொள்ளலாம். என்னுடைய கவனத்திற்கு வராமலேயே போயிருக்கலாம். நான் பார்க்கிறேன் என்று சொல்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்; தங்களிடத்தில் நானே கொடுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்க்கிறேன் என்று சொல்கிறேன். என்னுடைன் பார்வையிலே இருந்து விடுபட்டிருக்கலாம்,

(முற்பகல் 10·00)

2. ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

(இ) ஓர் உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளபடாத நிலையில் அதே பொருள் குறித்து கொடுக்கப்பட்டிருந்த மற்றொரு உறுப்பினருடைய தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நான் கூட இது விஷயமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன். அது திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. இவர்களுக்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். என்னுடைய பெயர் நீக்கப்பட்டு இருக்கிறதே அதற்கு என்ன காரணம்?

ஓர் உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் அதே பொருள் குறித்து கொடுக்கப்பட்டிருந்த மற்றொரு உருப்பினருடைய தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டது குறித்து

[1978 மார்ச் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நீண்ட காலத்திற்கு முன்பு கொடுத்து இருக்கலாம் என்று கருதுகிறேன். அண்மையில் கொடுக்கப்பட்டவர்களது ஒத்தி வைப்புத் தீர்மானத் மானத்தை எடுத்துக் கொண்டு இருக்கிறேன். உங்களை ஒதுக்கி விடவேண்டும் என்ற எண்ணம் இல்லை. நீங்கள் 10 நாளைக்கு முன்னால் தந்து இருக்கலாம். அன்றைய சூழ்நிலையில் இல்லை என்று சொன்னேன். இன்றைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது. ஏற்றுக்கொண்டு இருக்கிறேன். வேறு எதுவும் கருதிக் கொள்ள வேண்டாம். இன்றைக்கு கொடுத்துள்ளவர்களில் ஒத்தி வைப்புத் தீர்மானங்களை வைத்துக்கொண்டு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோயம்புத்தூர் விவசாயிகள், மற்றும் பல்வேறு விவசாயிகள், அவர்களுக்கு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். ஒத்திவைப்புத் தீர்மானம் ஏன் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற காரணத்தை விளக்குவதற்குத்தான் அனுமதி அளித்து இருக்கிறேன். தயவு செய்து திருத்திக்கொள்ளவேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி: தலைரவர்கள் கவனத்தோடு இருக்கிறார்கள். மகிழ்ச்சி.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, வேறு ஒரு ஒழுங்குப் பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு முறை ஒழுங்குப் பிரச்சினை கேட்டீர்கள். பதில் சொல்லிவிட்டேன். இப்படி பல முறை எழுந்து ஒழுங்குப் பிரச்சினை என்று கேட்டு ஏன் நேரத்தை விணக்குகிறீர்கள். தவவு செய்து உட்காருங்கள். நீங்கள் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து ஏற்கனவே முடிவு சொல்லியிருக்கிறேன். மீண்டும் வேண்டாம், உட்காருங்கள்.

திரு. ஏம். ஏ. லத்தீப்; அந்தப் பிரச்சினைக்குப் தீர்ப்புச் சொல்லிவிட்டீர்கள். இன்னொரு ஒழுங்கு பிரச்சினை, நான் கொடுத்து 14 நாள் ஆகி விட்டது. இது ஏன் இன்னும் எடுத்துக் கொள்ளப்பட என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: இத்தனை நாளைக்குள் கொடுக்க வில்லை வேண்டுமென்று விதி இருந்தால் கேளுங்கள். நான் சொல்கிறேன். அவைத் தலைவரின் நினைவில் இருக்கிறது. ஆய்வில் இருக்கிறது, தீர்ப்பு தரத்தான் போகிறேன். அதற்குள்ளே உறுப்பினர்கள் கேட்டால் நான் என்ன செய்வது?